# பிளாஸ்டிக் தடை குறித்து ஆலோசனை கூட்டம்




தர்மபுரி மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில், ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளை தடை செய்வது குறித்து ஆலோசனை கூட்டம் நடந்தது.

**தர்மபுரி, நவ.20:** தர்மபுரி மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில், ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளை தடை செய்வது குறித்து ஆலோசனை கூட்டம் நேற்று தர்மபுரியில் நடந்தது.

தர்மபுரி மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பில், தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் மற்றும் திருமண மண்டபம் பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் சிவருத்ரப்பா தலைமை வகித்தார். கூட்டத்தில், வரும் ஜனவரி 1ம் தேதி முதல் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த, தமிழக அரசு தடை பிறப்பித்துள்ளது. அதற்கு பதில், சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத, மாற்று பொருட்களை பயன்படுத்த வேண்டும். மேலும், தர்மபுரி மாவட்டத்தில் செயல்படும் ஓட்டல்கள், திருமண மண்டபங்களில் அதன் உரிமையாளர்கள் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் விழிப்புணர்வு பலகைகள் வைக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கும், மனித இனத்திற்கும், உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் ஒரு முறையே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. ஓட்டல் உரிமையாளர் சங்க தலைவரும் ஸ்ரீ ராமா போர்டிங் ஓட்டல் உரிமையாளருமான வேணுகோபால் நன்றி கூறினார்.